விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 26 ரபிஅவ் 9 இதழ் 274

யாழ்ப்பாணம் புதன்கிழமை 12-11 1986


புல்மோட்டையில்

## பி. எல். ஏ. தாக்குதலுக்கு 12ராணுவம் பலி; ஒருவர் காயம்

### நவீன ரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், புதன் புல்மோட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினருக்கும் மக்கள் விடுதலைப்படை (பி எல். ஏ) யினருக்கும் இடையில் நடந்த நேரடிமோதலில் பன்னிரண்டு இராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன் பல நவீனரக ஆயுதங்கள் மக்கள் விடுதலைப் படையால் கைப்பற்றப்பட்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜீப்வண்டியில் வந்து கொண்டிருந்த 15 இராணுவத்தினரை புல்மோட்டை பொலிஸ் நிலையத்திற்கு கால் மைல் தூரத்தில் மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள்

[8ம் பக்கம் பார்க்க]

# வடமராட்சியில் முப்படையினருடன் புலிகள் நேரடி யுத்தம்!

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் நேற்று மும்முனைத்தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள விருந்த முப்படையினருக்கும் தமது இயக்கப் போராளிகளுக்குமிடையில் உக்கிரமான நேரடி யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளது.

இதுவரை முப்படையினர் தரப்பில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தமது தரப்பில் 3 போராளிகள் பலியானதுடன் 5 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் விடுதலைப்புலிகள் கூறுகின்றனர்.

இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ் குடாநாட்டில் பெரும் இன ஒழிப்பை புரியும்நோக்குடன் சகல இராணுவமுகாம்களிலுமுள்ள இராணுவத்தினர் வெளியேற முயற்சித்தனர்.

கடற்படையினரினதும்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்டத்தில் ● பொம்பர், ஹெலி, ஷெல் தாக்குதல்

# ஆறு பேர் பலி; 40 பேர் காயம்!

## மந்திகை வைத்தியசாலை சேதம்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள பல்வேறு ராணுவ முகாம்களிலிருந்தும் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களுடன், வடமராட்சி பகுதியில் பொம்பர், ஹெலி ஆகியவற்றின் தாக்குதல் தல்களினுல் ஏழுபேர் பலியானுர்கள்; 40 பேர்வரை காயமடைந்தனர்.

இத்தாக்குதல்களின் போது மந்திகை வைத்தியசாலையும் சேதத்துக்குள்ளாகியது.

மேலும் பல வீடுகள், கடைகள் ஆகியனவும் தாக்குதலுக்குள்ளாகின.

### பருத்தித்துறையில்

பருத்தித்துறையில் நேற்று அதிகாலை சுமார் 5-30 மணி முதல் படையினரின் தாக்குதல்கள் இடம் பெற்றன. இரண்டு ஹெலி கொப்டர்கள் இப்பிராந்தியத்தை வட்டமிட்டு துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டன. இதேவேளை பொம்பர் விமானமும் குண்டு வீச்சுப் பணியில் ஈடுபட்டிருந்தது இடையிடையே முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்களினுல் ஆறு பேர் பலியானுர்கள். 16 பேர் காயமடைந்தனர். தச்சுத்தொழிலாளியான அருளானந்தம் (வயது 45] எஸ். நாராயணன் (வயது 60) மற்றும் அடையாளம் காணப்படாத நால்வர் ஆகியோரே கொல்லப்பட்டார்களாவர்.

நேற்றைய தாக்குதலின் போது மந்திகை வைத்திய சாலையும் சேதமாகியது. இவ்வைத்தியசாலையில் 1-ம், 2-ம் வார்ட்டுகள் உணவு தயாரிக்குமிடம், மாவட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகம், வைத்திய சாலைச்

(8ம் பக்கம் பார்க்க)

## இரத்தம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன் யாழ். ஆஸ்பத்திரிக்கு உடனடியாக 'இரத்தம்' தேவைப்படுவதால், 'இரத்ததானம் வழங்குமாறு நோயாளர் நலன்புரிச் சங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (மா)

## காயமடைந்தோர் விபரம்

யாழ்ப்பாணம், புதன் யாழ் குடாநாட்டில நேற்று நடந்த தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்தோர் விபரம்:

மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்: தி. சே உபாயதி வயது 22 பருத்தித்துறை, ந. நவநீதமோகன்

(8ம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் எதிர்த்தாக்குதல்

யாழ்ப்பாணம், புதன் பருத்தித்துறை, வல்லை ஆகியபகுதிகளில் ராணுவத்தினரை எதிர்த்து தமது போராளிகள் போரிட்டதாக ஈழப் புரட்சி அமைப்பு [ஈரோஸ்] அறிவித்துள்ளது.

## வல்லைவெளியில் முகாமமைக்கும் ராணுவத்தினரின் முயற்சி போராளிகளால் முறியடிப்பு

(அலுவலக நிருபர்)

வல்லை வெளியில் முகாமிடும் நோக்கத்துடன் ஹெலிகொப்டர்களிலிருந்து இறங்கிய இராணுவத்தினர் மீது போராளிகள் உக்கிரமான தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் மீண்டும் ஹெலிகொப்டர்களில் ஏறி முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

போராளிகளின் தாக்குதலின் போது படையினர் ஹெலி கொப்டர்களிலிருந்து ஷெல் தாக்குதல் நடாத்தினர்.

இத்தாக்குதல்களால் வல்

[8ம் பக்கம் பார்க்க]

இலங்கை இனப்பிரச்னை

## அரசியல் தீர்வொன்றையே இந்தியா விரும்புகிறது

புதுடில்லி, புதன் இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு அமைதியான நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான அனைத்துமுயற்சிகளையும் இந்திய அரசு மேற்கொண்டுவருகிறது என்று இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு நட்வார்சிங் நேற்று லோக்சபாவில் தெரிவித்தார்

இலங்கையின் பிரச்னைகள் பற்றி இந்தியா அறிந்துள்ளது பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனுதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனுவுக்குமிடையே பெங்களூரில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் முடிவுகளை எதிர்பார்க்குமாறு அவர் உறுப்பினர்களிடம் பேசுகையில் மேலும்தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று பட்ஜெட்

கொழும்பு, செவ்வாய் இன்று ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின் 10வது வரவு செலவுத் திட்டம் பாராளு மன்றத்தில் நிதியமைச்சர் ரொனி டி மெல்லினுல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட உள்ளது. இவ்வருட பட்ஜட்டில் சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ் நகரில்

## மர்மமான முறையில் கடைகளஞ்சிய அறைதீக்கிரை

யாழ்ப்பாணம், புதன் யாழ். நகரில் நேற்றுமுன் தினமிரவு மர்மமானமுறையில் கடைக்களஞ்சிய அறைக்குள் இருந்த சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான சகல பொருட்களும் தீக்கிரையாகின.

யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள 'கோல்டன் பிரமிக்' கடைக்கு எதிரிலுள்ள, அக்கடையின் களஞ்சிய அறைக்குள் உள்ள பொருட்களே தீக்கிரையாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் அந்த அறையைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் காலையில் வந்து பார்த்தபோது பொருள்கள் எரிந்திருந்ததாகவும் கடை ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

முன்பக்கத்தில் இரும்புக் கதவும் மேலேயும் மற்றும் மூன்று பக்கங்களிலும் 'சங்கிறீட்' சுவரும் உள்ள இக் கடை அறைக்குள் உள்ள பொருட்கள் யாவும் மர்ம

[5-ம் பக்கம் பார்க்க]

## ராணுவம் சுட்டுக் காயம்

யாழ்ப்பாணம், புதன் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிற்கு சமீபத்திலுள்ள வீட்டிலிருந்து இராணுவத்தினர் சுட்டதால் கப்பர் மலையைச் சேர்ந்த தங்கமணி (32 வயது) என்ற பெண் காயமடைந்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## "முதல்ஷெல் வெடித்தபோது ஒருவர் 'பலியானுர்'"

### அச்சுவேலியில் காயமடைந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், புதன் அச்சுவேலி சந்தையில் நேற்றுப் பிற்பகல் முதலாவது 'ஷெல்' வந்து விழுந்து வெடித்த போது கடையருகில் நின்ற ஒருவர் பலியானுர். மற்றொருவர் காயமடைந்தார்

அச்சுவேலி 'ஷெல் தாக்குதலில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ள அச்சுவேலியைச் சேர்ந்த செ சந்திரன் [21 வயது] இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; சைக்கிளைப் போட்டுவிட்டு காயமடைந்தவரைப் பார்ப்பதற்கு சென்றசமயம் அடுத்தடுத்து இரு ஷெல்கள்

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி (Broilers) விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 5637)

ஹொண்டா (Honda) 86 ஸ்ரீ M B-8 விற்பனைக்கு உண்டு ம. சிலுவைராசா, (76) 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 5729

CG 125 Honda மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தர்மராஜன், பழைய வீதி, இருபாலை, கோப்பாய். C 5731

வெளிநாட்டு நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகம்றேட்ஸ், 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5657

புன்னாலைக்கட்டுவன் ஈவினை கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடியவீட்டுடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சு. கமலாம்பிகை, C/o மங்களேஸ்வரன், காரைக்கால், சிவன்கோவிலடி. இணுவில் C 5727

தீபாவளிச் சிறப்பிதழாகச் சிரித்திரன் வெளிவந்துவிட்டான். "வைரம் விளைகின்றது" ஆசிரியர் தலையங்கம், ஓவியத்திற்கு ஒரு கதைப் போட்டி சுந்தரின் கார்ட்டூன்கள், மதுரமான மகுடி பதில், மருத்துவ அறிவுப் போட்டி, தீபாவளி முறுவல். இன்னும் பல சிறப்பம்சங்களுடன் வெளிவந்துள்ளது. தொடர்புகள்: 550, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். C 5713

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் M. P. C. S. இற்கு அருகாமையில் கிணற்றுப்பங்குடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். ந. கனேஸ்வரி, அலவத்தை, அளவெட்டி. C 5719

மிகத்திறம் நிலையிலுள்ள சிவப்புநிற 81 ஸ்ரீ தொடர்பிலக்க வெஸ்பா ஸ்கூட்டர் (Px 150 Vespa) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சிறீதரன், மின்சார சபை சுன்னாகம், அல்லது சிவபுர வீதி, வல்வெட்டித்துறை. C 5711

Prima Poultry Food எல்லா வகையான பிறிமா கோழித்தீனும், மருந்து வகைகளும், ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தை, நல்லூர். C 5706

Show Case, கதிரைகள், தையல்மெஷின் (Singer Zig-Zag) T V., Dressing table, Kenwood Cooker, Cake mixer, Vono spring beds, Pyrex கிளாஸ் வகைகள் மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. 83/2, K K.S. Rd, கொக்குவில் சந்தி. C 5732

## வகுப்புக்கள்

108 Brown Road, A/L 88 அசேதன இரசாயனம் [S. P. D தொகுப்பு] ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 15-11-86 சனி 6-15 a. m. சனி, ஞாயிறு 6-15 a m. (C 5733)

## தேவை

கன்னாதிட்டியிலுள்ள றெலக்ஸ் பேக்கரிக்கு, பேக்கரி அனுபவமுள்ள உதவி ஆட்கள் தேவை. நேரில் வரவும். (C 5700)

## சேவை

உங்கள் இல்லத்துக்குத் தேவையான சகல விதமான நவதானியவகைகள், பால்மா வகைகள், பாடசாலை உபகரணங்கள், கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுகள் உங்கள் வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளவும்! M G. M 777 K.K S.Road, Jaffna, T.P 22611. (C 5048)

## மணப்பந்தல்

சைவகுலத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்து A/L பாஸ் பண்ணிய 27 வயதுடைய செவ்வாய்க்குற்றமற்ற வெளிநாட்டில் வேலை பார்க்கும் மகளுக்கு பெற்றோர், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லண்ட், கனடா ஆகிய நாடுகளில் வேலைபார்க்கும் மணமகனை விரும்புகிறார்கள். வெளிநாடு போக விரும்பும் மாப்பிள்ளையும் விரும்பத்தக்கது. சாதகத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. C 5723 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 5723

## தவறிவிட்டது

திருகோணமலை சாம்பல்தீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னராசா யோகராசா ஆகிய எனது அடையாள அட்டை 611582366 V இலக்கம் கொண்டது இத்துடன் 70 ரூபா பணமும் புத்தூரிலிருந்து மட்டுவில் செல்லும் வழியில் தவறிவிட்டது. ஆகவே கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரிக்கு அறிவிக்கவும். தா சிவலிங்கம். விமான நிலையவீதி, பத்தமேனி, அச்சுவேலி. C 5720

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல T/285

செபஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை மகம் பெண் அன்னம்மா சில்லாலை, பண்டத்தரிப்பு மனுதாரர்

எதிராக

1. மேவின் ஒகஸ்ரின் பெர்னாண்டோ
2. பெண் அஞ்ஜெலா 139/11, ஜம்பட்டாவீதி, கொழும்பு.
3. அந்தோனிப்பிள்ளை சுகேந்திரன்
4. அந்தோனிப்பிள்ளை மகள் பரிமளா
5. அந்தோனிப்பிள்ளை தனேந்திரன்

எல்லோரும் சில்லாலை பண்டத்தரிப்பு எதிர் மனுதாரர்கள்.

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி முற்பகல் 8 30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 19ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு
சோ. தேவராசா,
மனுதாரரின் சட்டத்தரணி.
[C5705]

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு /6365

தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி, வீரகத்தி இராசுவும் பெண் சரஸ்வதியும்

வழக்காளிகள்.

எதிராக

கீரிமலை கந்தன் மார்க்கண்டுவும் பெண் சரஸ்வதியும்

ஈடு/6365 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ந் திகதி புதன்கிழமை (26-11-1986) முற்பகல் 10 00 மணி தொடக்கம் எனக்களித்த அதிகாரத்தின்படி அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 8437/- மேலும் இதில் ரூ 5000/-க்கு 10-10-1985ம் தொடக்கம் 28-5-1986 வரைக்கும் வருடமொன்றுக்கு 55% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 12% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூ. 4024/20 சதம் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி, தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை "நாராயன்புதுக்காடு" நிலப்பரப்பு இரண்டு [2] குளி [.79] தசம் ஏழு ஒன்பதும், இதற்கு எல்லை கிழக்கு கந்தன் இரத்தினத்துக்கும் வயிரமுத்துவக்குமுரிய ஆதனம், வடக்கு இதன் கீழ் விபரிக்கப்படும் 4ம் ஆதனமும் பெரியான் செல்லனுக்கும் பெண் இந்திராவுக்குமுரிய ஆதனம் மேற்கு கந்தன் குழந்தைவேலுவுக்கும் பெண் பாக்கியநிதக்குமுரிய ஆதனங்கள் தெற்கு நாகலிங்கம் கனகரத்தினத்தினுதனம், இதடங்கலும் இன்னும் வடக்கு றோட்டுக்குப்போகும் பாதைப்பங்கும்.

553, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
10-11-1986.
[C 5726]

வ. சி. மகாதேவன்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
ஏல விற்பனையாளர்.

---

## இலண்டன் பரீட்சைகள்

### மே / யூன் 87

I. C. M. A. — I & II

A. A. T. — ஆரம்பம், இடைநிலை, இறுதி.

I. D. P. M. — பகுதி I & II

வகுப்புகள் ஆரம்பம்: 1-12-86.

தொடர்பு:- ஐ பொன்னம்பலம்,
149, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[C-5722]

---

## இன்று ஆரம்பம் 12-11-1986

நகரின் பாதுகாப்பான இடத்தில் உங்கள் கொள்வனவை மேற்கொள்ள

### யாழ். அரிசிக் களஞ்சியம் (YAAL RICE STORES)

தரமான அரிசி வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும், மற்றும் மாட்டுத்தீன், கோழித்தீன் முட்டை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**234/3, ஸ்ரான்லி வீதி,**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

[C-5664]

---

## Jaffna College Technical Institute, Vaddukoddai.

### புதிய தொழில்நுட்பக் கல்வி வகுப்புகள்-1987.

I. Diploma in Draughtsmanship (Civil)
மனை நிர்மாண பட வரைஞர்
(தவணைக்கு ரூபா 750/-)

II. Diploma in Computer Programming and Data Processing (Basic + Cobol)
கணனி இயக்கப் பயிற்சி
(தவணைக்கு ரூபா 1500/-)

1 வருட, 2 தவணை முறை, முழுநேர வகுப்புக்கள் 12-1-87 இல் ஆரம்பமாகின்றன.

22 வயதுக்குட்பட்ட இரு பாலாரும் குறைந்தது G. C. E [O/L] தராதரத்தில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 3 பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாட சித்தியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் பத்திரம் ரூபா 10/-. காரியாலயத்தில் பெற்று 15-12-86 க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்.
[A-3087]

---

## NEW ADMISSION

### Jaffna College Technical Institute, Vaddukoddai.

(A) B. Eng -PROFESSIONAL Degree Course E C E. (Lon) Part I and II (A) (B) (C) Full time course of study in Engineering subjects, leading to Professional College Degree B. Eng award, will commence in January 87. During this 4 year/8 semesters course candidates could successfully complete E. C E. (Lon) Part I and II, with approved practicals + project work.

Students of both sex, below 22 years of age with minimum 3 G C E. (A/L) passes including Applied and / or Pure Mathamatics can apply.

Fees: Rs. 2.500/- per semester.
Apply on forms (Rs 10/-) available at office, to Director, before 15th December, 86.
Limited Studentship assistance to deserving students are available.

(A 3088) DIRECTOR,

# சிரியா மீது ஈ. ஈ. ஸி. நாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட தடை

லண்டன், நவம்பர் 11

**சிரியாமீது ஐரோப்பிய சமூக (ஈ. ஈ. ஸி.) நாடுகள் ராஜதந்திர மற்றும் ஆயுத விநியோக நடவடிக்கைகள் தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட தடைகளை விதித்துள்ளன. பிரிட்டனின் வேண்டுகோளுக்கிணங்கவே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

லண்டனில் ஈ. ஈ. ஸி. வெளிநாட்டமைச்சர்களின் கூட்டம் நேற்று இடம்பெற்றது இக் கூட்டத்திலேயே கிரேக்கம் தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய சமூக நாடுகள் சிரியா மீது மேற்குறிப்பிட்ட தடையைக் கொண்டுவந்தன.

சிரியா பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து அந்நாட்டுடனான ராஜதந்திர உறவுகளை பிரிட்டன் கடந்த மாதம் முறித்துக்கொண்டது தெரிந்ததே.

## உலகச் செய்திகள்

இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய சமூக நாடுகளையும் சிரியா மீது ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரிட்டன் வலியுறுத்தியிருந்தது.

கடந்த வாரம் லக்ஸம்போர்க் நகரில் ஈ ஈ ஸி. நாடுகளிடையே பிரிட்டனின் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது. இதுகுறித்து லண்டனில் விரிவாக ஆராய்வதென முடிவுசெய்யப்பட்டிருந்தது

சிரியா மீதான ஈ ஈ ஸி. நாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தடைகள் பற்றிய விபரம் வருமாறு: ஆயுத விற்பனைக் கட்டுப்பாடு, உயர் மட்ட சிரிய ராஜதந்திரிகள் எண்ணிக்கையில் கட்டுப்பாடு, சிரிய ராஜதந்திரிகள் மீது உன்னிப்பான கண்காணிப்பு, சிரிய விமானச்சேவையை தீவிர அவதானிப்புக்குட்படுத்தல் என்பனவே இக் கட்டுப்பாடுகளாகும்.

கடந்த ஏப்ரல் மாதம் ஹீத்ரோ விமானநிலையத்தில் இஸ்ரேலிய விமானமொன்றில் சிரியா குண்டுவைக்க முற்பட்டதாகக் குற்றம் சாட்டியே பிரிட்டன், சிரியாவுடனான தனது ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டது.

பாரிஸில் —

## ‘பேஜோ’ அலுவலகம் எதிரே பயங்கர குண்டு வெடி

பாரிஸ், நவ 11.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் ‘பேஜோ’ மோட்டோர்கள் தலைமையகம் மற்றும் ஒரு வர்த்தக நிலையம் ஆகியவற்றுக்கு எதிரே மூன்று பயங்கர குண்டு வெடிப்புகள் நேற்று இடம்பெற்றன.

ஒருமாதகால இடைவெளிக்குப்பின்னர் முதல்தடவையாக நேற்று இக்குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன.

இந்த அதிசக்தி வாய்ந்த குண்டுகளால் கட்டிடங்கள் பலத்த சேதத்துக்குள்ளாயின என்றும் ஆட்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவத்துக்கு எவரும் இதுவரை உரிமை கோரவில்லை. பாரிஸ் பொலிஸார் ஸ்தல விசாரணைகளுடன் தீவிர புலன் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

கடந்த மாத முதல் பகுதியில் பாரிஸில் அடுத்தடுத்து பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றது தெரிந்ததே.

## பழைய மாணவர் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் கைதடிமுத்துக்குமார சுவாமி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் எதிர்வரும் இன்று 19ம்திகதி புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

(வா)

## நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

பருத்தித்துறை, செவ்.

வராத்துப்பளை பண்டாவத்தைக் குளத்தை ஆழமாக்கிப் புனரமைப்புச் செய்வதற்கு 50,000 ரூபா நிதி ஒதுக்கித் தருமாறு யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு.வி எம். பஞ்சலிங்கத்தை வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகத் தலைவர் திரு எஸ். திருச்செல்வம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ் சமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வைவேலும்மயிலும் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## பின்தங்கிய பாடசாலைகளில் குழு முறைக் கல்விக்கு நடவடிக்கை

பருத்தித்துறை. செவ்

யாழ் கல்வித்திணைக்களம் பின்தங்கிய பகுதி பாடசாலை மாணவர்களின் கல்விஅறிவை மேம்படுத்தும் முகமாக குழுமுறையான கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்திற்கமைய வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள உடுத்துறை மகா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி மகாவித்தியாலய க. பொ. த. (சாதாரண தா) வகுப்பு மாணவ, மாணவிகளுக்கான குழு முறைக்கற்பித்தல், உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் திரு வி. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது

இரு நாட்கள் நடைபெற்ற இக் குழுமுறைக்கற்பித்தலில் விஞ்ஞானக்கல்வி ஆலோசகர்களான திரு. எஸ். அம்பிகாவரன், திரு. வி. சிவசிதம்பரமும், கணிதக்கல்வி ஆலோசகர்களான திரு. எம் ஜெயரட்ணம், திரு எஸ். தியாகலிங்கம், திரு. எஸ் சிவஞானசுந்தரமும் கற்பித்தல்களை மேற்கொண்டனர்.

மேலும்இம்மாதம் 28ம்,29ம் திகதிகளிலும் இக் குழுமுறைக் கற்பித்தல்கள் இடம்பெறுமெனவும் யாழ். கல்வித்திணைக்கள விஞ்ஞானக்கல்வியதிகாரி திரு. எஸ். செல்லத்துரை தெரிவித்தார். (சி)

‘கணவர் கைவிட்டுச் சென்றார்’

## தமிழீழ நீதி மன்றத்தில் மனைவி வழக்குத் தாக்கல்

பண்டத்தரிப்பு செவ்

தம்மையும் தமது மூன்று பிள்ளைகளையும் தமது கணவர் கைவிட்டு சென்று விட்டார் என்றும் வறுமையில் வாடும் தங்களுக்கு அவரிடமிருந்து தாபரிப்பு பணம் பெற்றுத்தருமாறும்கோரி மாதகலை சேர்ந்த இளம் பெண் ஒருவர் மாதகல் தமிழீழ கிராம நீதிமன்றத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

கணவர் தங்களை கைவிட்டு சென்று ஒருவருட காலமாகி விட்டது என்றும், தமது பெற்றோர்களின் பராமரிப்பிலேயே தாம் தற்போது வாழ்ந்து வருவதாகவும். அவர்களும் வறுமை நிலையில் இருப்பதால் மிகுந்த கஷ்ட நிலையில் தங்கள் வாழ்வதாகவும் மேற்படி முறைப்பாட்டில் இளம் பெண் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி விசாரணை நடாத்துவதற்காக பிரஸ்தாப கணவருக்கு மாதகல் தமிழீழ கிராம நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி வைத்துள்ளது. (எ)

## முன்னாள் சோவியத் பிரதமர் காலமானார்

மாஸ்கோ, நவம்பர் 11

முன்னாள் சோவியத் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான திரு வச்சஸ்லாவ் மொலாட்டோவ் காலமானார்.

96 வயதான இப் பிரமுகர் நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். கடந்த சனிக்கிழமை இவரது மரணம் சம்பவித்தது.

தொடர்ந்து நேற்றுமுன்தினம் ‘டாஸ்’ செய்தி ஸ்தாபனம், மொலட்டோவ் மரணத்தை ஊர்ஜிதம்செய்தது

1917ம் ஆண்டு நவரஷ்யாவின் சிற்பியான லெனினுடன் சேர்ந்து ரஷ்ய சோஷலிசப் புரட்சியில் இவர் தீவிர பங்கு வகித்தார் தொடர்ந்து சோவியத்யூனியனின் பிரதமராகவும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் வெளிவிவகார அமைச்சராகவும் கடமையாற்றினார்.

இரண்டாம் உலக யுத்தத்தினபோது ரஷ்யத் தலைவர் ஸ்டாலினுடன் சேர்ந்து இவர் தீவிர பங்காற்றினார்.

பிற்காலங்களில் சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியுடன் இவர் கருத்துவேறுபாடுகள் கொண்டிருந்ததன் காரணமாக அக்கட்சியிலிருந்தும் விலக்கப்பட்டார். தொடர்ந்து இரு ஆண்டுகளுக்கு முன்னர் இவர் அக்கட்சியல் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

மேற்கு நாடுகளின் தலைவர்களால் இவர் பெரிதும் வெறுக்கப்பட்டிருந்தார். முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில, மொலாட்டோவை “சைபீரியக்குளிரை விட கொடூரமான பேர்வழி” என்று ஒருதடவை விபரித்திருந்தார்.

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம் உதவி

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி லயன்ஸ்கழகம் கண்பார்வை குறைந்த மூன்னூறுபேர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக வழங்கியுள்ளது.

லயன்ஸ் கழகத்திற்குக் கிடைத்த இம்மூக்குக்கண்ணாடிகளை கழகத்தின தலைவர் டாக்டர் லயன் பே. பிலிடஸ் வழங்கியுள்ளார். [ஓ]

## கடல்யானை

புங்குடுதீவு, செவ்.

அனலைதீவு தெற்கு கடற்கரை அருகில் கடந்த வாரம் கடல்யானை ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

இந்த கடல் யானையின் தோற்றம் முப்பது அடி நீளம் பத்தடி அகலம் உள்ளது

இதனை பார்ப்பதற்கு பெருந்தொகையான மக்கள் கூட்டம் அங்கு திரண்டது.

## எதிர்ப்புக்கு மத்தியிலும் காதல் வெற்றிகண்டது

பண்டத்தரிப்பு, செவ்.

பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் இருவருட காலமாக காதலித்துவந்த காதல் ஜோடியொன்றுக்கு பெற்றோரின் அனுமதியுடன் பதிவுத்திருமணம் செய்து வைக்கப்பட்ட சம்பவம் பெரியவிளானில் நடைபெற்றது தமிழ் ஈழ இராணுவ நீதிச்சபையின் விசாரணையின் போது நிகழ்ந்துள்ளது.

குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும், சங்கானையைச் சேர்ந்த யுவதி ஒருவருக்குமிடையில் இரண்டு வருடகாலமாக நிலவிவந்த காதல் இருபகுதியினரின் பெற்றோரின் தலையீட்டினால் தடை ஏற்பட்டது என்றும் காதலர்கள் மேற்படி தமிழ் ஈழ இராணுவ நீதிச்சபையினரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து சபையினர் இருபகுதி பெற்றோரையும் அழைத்து வந்து அவர்களின் சம்மதத்தை பெற்று பதிவுத் திருமணத்தையும் நடாத்தி வைத்திருப்பதாக இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## அகதிகள் வவனியா திரும்பியுள்ளார்கள்

வவனியா, செவ்

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைகாலமும் தங்கியிருந்த வவனியாமாவட்டத்தைச் சேர்ந்த 51 அகதிகுடும்பங்கள் மீண்டும் வவனியா திரும்பியுள்ளன.

செட்டிக்குளம், சூசைப்பிள்ளையார் குளம், தோணிக்கல்லு பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவர்கள் ஆகும்.

வவனியா-கண்டிவீதி லிங்க தோட்டத்திற்கு அருகாமையிலிடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலையடுத்து ஏற்பட்ட அசம்பாவிதத்தினாலேயே இம்மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சிமாவட்டத்திற்கு அகதிகளாக சென்றிருந்தனர்.

(ரா-கே)

## நலன்புரிச்சங்கம் மகஜர்

சாவகச்சேரி, செவ்.

“யாழ். கோட்டையில் இருந்து அடிக்கடி ஏவப்படு

[7-ம் பக்கம் பார்க்க]

## “கடந்த 40 வருடங்களாக அணு ஆயுதங்களே உலக யுத்தங்களைத் தவிர்த்துள்ளன’

### தட்சர் கூறுகிறார்

லண்டன் நவம்பர் 11

“அணு ஆயுதங்களே கடந்த 40 ஆண்டுகாலமாக உலக யுத்தங்களை தவிர்த்துவந்துள்ளன” என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் தெரிவித்துள்ளார்.

லண்டன் மேயர் வழங்கும் வருடாந்த சம்பிரதாயபூர்வ விருந்துபசாரமொன்றில் நேற்று உரையாற்றியபோதே திருமதி தாட்சர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: அணு ஆயுத பீதி காரணமாகவே உலகம் கடந்த 40 வருடங்களாக பெரும் யுத்தங்களில் இறங்கவில்லை

எனினும் அணுஆயுதங்களின் எண்ணிக்கை அதிகரிப்பது கவலைக்குரியதாகும். இதனைக் கட்டுப்படுத்த சோவியத் யூனியனும். அமெரிக்காவும் நிச்சயம் ஒத்துழைக்கும்”.

அண்மையில் இடம்பெற்ற “ரெய்க்ஜாவிக் சந்திப்பில் அமெரிக்க அதிபர் திரு றீகன் கொண்டிருந்த நிலைப்பாடு சரியானதாகும்: ‘நட்சத்திரப் போர்’ திட்டத்தின் மூலமே சோவியத்யூனியனை பேச்சுக்களின்போது கையாள முடிந்தது” என்றார்.

திருமதி தாட்சர் அமெரிக்காவுக்கு அண்மையில் உத்தியோகபூர்வ விஜயமொன்றையும் மேற்கொள்ளவுள்ளார்.

**மணிவாக்கு**

சகலரையும் புகழ்பவனை அதிகம் நம்பக்கூடாது. சகலரையும் குறைகூறுபவனை கொஞ்சம்தான் நம்பலாம். சகலரையும் அலட்சியப்படுத்துபவனை நம்பவே கூடாது.

— ஜோகான் காஸ்பார்வேவேட்டர்.

# நமது நோக்கு

## எதற்காக இந்தத் திடீர் நடவடிக்கை?

தமிழ்ப்பிரதேசங்களில் தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்தவண்ணமிருக்கின்றன. இருதரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன. பலர் காயமுறுகின்றார்கள், ஆயுதங்கள் கைப்பற்றப்படுகின்றன.

ஆங்காங்கே நடைபெறும் இச் சம்பவங்கள் பற்றிய செய்திகள் சிலசமயம் பரபரப்பாகவும், சிலசமயம் அருவருப்பாகவும் இருப்பது மட்டுமல்ல, சிலசமயங்களில் ஆச்சரியமளிப்பதாகவும் நம்பமுடியாதவையாகவும்கூட இருக்கின்றன.

நவீன ஆயுதங்களுடனும் சகலவிதமான பாதுகாப்பு கவச ஏற்பாடுகளுடனும், வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசனைகளுடனும், பெரும் ஆள்பலத்துடனும் செயல்படுகின்ற இலங்கை அரசின் படைகளை முழுக்கவும் 'கெரிலா' போர்முறையிலான தந்திரோபாயங்களுடன் எதிர்கொண்டு திக்குமுக்காடச்செய்து வெற்றியுடன் திரும்பும் போராளிகளின் துணிவையும் வீரத்தையும் கேள்வியுறும்போது தமிழ்மக்கள் ஆச்சரியமடைகிறார்கள். உடலில் புல்லரிக்க வியந்து நிற்கிறார்கள்.

''ஓராயிரம் வருடம் ஓய்ந்துகிடந்தபின்னர் வாராது வந்த'' இந்த வீர வரலாறு பரணி பாடி பாதுகாக்கப்படவேண்டிய ஒன்று.

இங்கே இவ்வாறு நிலைமை இருக்க, இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கும் தகவல்கள் இந்திய அரசியலாரின் போக்கில் பலத்த அதிருப்தியையும், நம்பிக்கையீனத்தையும் தோற்றுவிப்பவையாய் உள்ளன.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் இருப்பிடங்களை கடந்த 8ம் திகதி இந்திய பொலிசார் முற்றுகையிட்டு போராளிகளின் தலைவர்கள் பலரைக் கைதுசெய்துள்ளனர். இவர்களில் பலரும் விசாரணையின்பின் விடுவிக்கப்பட்டதாகச்செய்திகள் வந்தபோதிலும் முக்கிய தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்திய பொலிசாரின் இத்திடீர் நடவடிக்கைக்கு அடிப்படைக் காரணம் புரிந்துகொள்ள முடியாமலிருக்கின்றது. அதேசமயம் பல்வேறுவிதமான கருத்துக்கள் ராஜதந்திர வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

மத்திய அரசு அதிகாரி ஒருவரின் கூற்றுப்படி தமிழ்நாடு அரசே இந்த நடவடிக்கைக்கு உத்தரவிட்டதாகவும், மாநிலத்தில் சட்ட ஒழுங்கு விடயத்தில் அவ்வரசு இப்படியான நடவடிக்கையை எடுப்பதற்கு உரிமையுண்டென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, அண்மையில் போராளிகள் குழு ஒன்றுக்கும் தமிழ்நாடு பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு சச்சரவைப் பின்னணியாக வைத்தே தமிழ்நாடு பொலிசார் மேற்படி திடீர் நடவடிக்கையில் இறங்கிய தாகக்காட்ட முற்பசி எடுக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை எடுக்கப்பட்ட சமயம் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் இல்லை பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்திக்க அவர் புதுடில்லி சென்றிருந்தார்.

தமிழ்நாடு அரசே இந்நடவடிக்கையை தன்னிச்சையாக எடுத்திருந்தாலும்கூட அது முதல்வர் சென்னையில் இல்லாத சமயத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்று கருதுவதற்கில்லை. எனவே இது மத்திய மாநில அரசுகள் முன்கூட்டியே திட்டமிட்டுச்செய்த ஏற்பாடு என்று கொள்வதில் அர்த்தமுண்டு.

அவ்வாறாயின் எதற்காக இத்திடீர் நடவடிக்கை?

இனப் பிரச்னைக்கு இலங்கை அரசு முன்வைத்துள்ள யோசனைகளை ஏற்று பேச்சுவார்த்தைகளில் அவர்களைக் கலந்துகொள்ளச் செய்வதற்கான நெருக்குதலாக இந்நடவடிக்கை இருக்கலாமென கொழும்பில் நம்பப்படுகின்றது.

அதேவேளை அண்டை மாநிலமான கர்நாடகத்தின் தலைநகர் பெங்களூரில் நடைபெறவிருக்கும் 'சார்க்' மகாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன செல்லவிருப்பதாலும் அங்கே அவர் திரு. ராஜீவ் காந்தியுடன் இலங்கை இனப்பிரச்னை பற்றி ஆலோசிக்கவிருப்பதாலும் தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ்போராளிகள் அம் மகாநாட்டைக் குழப்ப எத்தனிக்கலாம் என்ற சந்தேகத்தில் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

எந்த விதத்தில் பார்த்தாலும் - யார் செய்தாலும் மேற்படி திடீர் நடவடிக்கை இலங்கை அரசுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் திருப்தியும் மகிழ்ச்சியும் அளித்துள்ளது என்று கூறத்தேவையில்லை.

இலங்கைத் தமிழ் மக்கள் நீதியான ஒரு தீர்வுக்காகவே போராடிவருகிறார்கள். இதில் இந்திய மத்திய அரசும் தமிழ்நாடு மாநில அரசும் உண்மையாகவே உதவி புரிவதானால் இதில் சம்பந்தப்பட்டுள்ள தமிழர் பிரதிநிதிகளை எந்தவித நெருக்குதல்களுக்கும் உள்ளாக்குவது நியாயமாகாது. நீதியான சட்டபூர்வமான கோரிக்கைகளுக்கு இணங்க மறுக்கும் இலங்கை அரசையே அவர்கள் நெருக்குதல் செய்யவேண்டும்.

தமிழர் குழுக்களின் தலைவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையால் இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அதிருப்தியையும் சந்தேகத்தையும் உடனடியாக இந்திய அரசு போக்கிக்கொள்ள வேண்டும்.

# சோதனைக்குள்ளாகியுள்ள யாழ். ஆஸ்பத்திரி சேவைகள்

பெரியாஸ்பத்திரி நிர்வாகம் தமிழ் மக்களுக்குச் சேவை செய்வதற்குப் படும் துன்பம் அளப்பில்லாதது. ஒக்ஸிஸன் சிலிண்டர்களை முன்பு லொறியில் கொண்டுவர அனுமதி இருந்தது. ஆனால் இந்த அனுமதி இப்போது மறுக்கப்பட்டுள்ளது. வேண்டுமென்றால் கப்பலில் கொண்டு செல்லுங்கள் என புதியஉத்தரவு பிறந்துள்ளது.

பாவிக்கப்படும் மருந்துகளென் பலவற்றிலும் பெரியாஸ்பத்திரி தனது கவனத்தை திருப்பியுள்ளது.

ஒக்ஸிஜன் இல்லாமல் அறுவைச்சிகிச்சை செய்யமுடியாது. இருந்தாலும் சில இக்கட்டான சந்தர்ப்பங்களில் அனுபவம்மிக்க டாக்டர்கள் அங்கு அறுவைச் சிகிச்சை செய்வதை அவதானிக்கமுடிகின்றது- இந்த வகையில் கடமையுணர்வு மிகுந்த




பற்பல தூர இடங்களில் இருந்து பெரியாஸ்பத்திரிக்கு நோயாளிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி வந்துபோவது கஷ்டம். போக்குவரத்து செலவுகளும் அதிகம் என்ற காரணங்களால் கூடுதலாக சில நாட்களுக்குப் பயன்படக்கூடியவிதத்தில் சற்று அதிக குளிகைகளை வழங்குகின்றது. நோயாளர்கள் இது தமக்குச் செய்யும் சேவை என அறியவேண்டும். வெளியிடங்களில் இக் குளிகைகளை விற்பது கூடவே கூடாது.

நோயாளிகட்கு உதவி செய்வதற்காக பெரியாஸ்பத்திரி நிர்வாகம் வருடத்துக்கு 3லட்சம் ரூபா பெறுமதியான குளிகைகளை வெளியிலே வாங்கிக் கொண்டிருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் இப்போது அரசாங்கம் கொடுக்கும் மருந்தினை பல சிரமங்கட்கு மத்தியில் யாழ்ப்பாணம் கொண்டு வரவேண்டியிருக்கிறது. இவ்வாறு கொண்டு வருவதற்கு ஆஸ்பத்திரி மேலதிக செலவாக ரூ. 50 ஆயிரத்தைச் செலவு செய்கின்றது.

டாக்டர்களைப் பாராட்டியே தீரவேண்டும். வெளிநாடுசென்றவர்களைத் தவிர்த்து இங்கு இருப்போர் தியாக உணர்வு கொண்டோல் ஒருசிலரே.

முகாமுக்கு வெளியே ராணுவம் வந்தால் பொதுமக்கள் ஓடுகின்றார்கள்! ''ஷெல்'' அடிபட்டு யாராவது ஆஸ்பத்திரிக்கு வந்தால் தமது உயிரைப்பார்க்காத டாக்டர் ஆஸ்பத்திரிக்குள் ஓடிக்கொண்டிருக்கிறார். அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் மிக அத்தியாவசிய சேவையொன்றில் அவர் ஈடுபடுகின்றார்.

### அந்த உரையாடல்

பெண்கள் வார்ட் ஒன்றில் நுழைந்து பார்த்தேன். கணவனும் மனைவியும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். காது கொடுத்துக்கேட்டேன். உரையாடல் இதுதான்:-

''...நீங்கள் எனக்காகஇரத்தம் கொடுப்பது எனக்கு விருப்பம் இல்லை. இரத்தம் வெளியாலை இருக்கிற ஆட்களைப் பிடித்தால் ஒரு பைவ் ஹண்றட் பக்ஸோடை [Five Hundred Buks] கொண்டு வரலாம் தானே'' என்று அந்தப் பெண்கூறிக்கொண்டிருந்தார்.

திக்கவயல் — தர்மகுலசிங்கம்

ஒரு பெண்ணுக்குக்குழந்தை பிறப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தையின் இரத்தக் குறூப்பும் (Blood group) தாயின் இரத்தக் குறூப்பும் வெவ்வேறுபட்டவைகளாக இருப்பின் குழந்தை பிறந்தவுடன் சக்தி வாய்ந்த Roham என்ற ஊசிமருந்தைப் போட்டேயாகவேண்டும். இதன்விலை ரூபா 600க்கு மேல் கள்ள மார்க்கட்டில் இதன் விலை சில சமயங்களில் ஆயிரம் ரூபாவாகவும் இருக்கும். இம் மருந்தினை வாங்குவதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் கடுமையான கவனம் செலுத்தியுள்ளது. நாம்நடத்திய விசாரணைகளிலிருந்து இந்த உண்மைகளை அறிய முடிந்தது. அது மட்டுமன்றி பாமபுக்கடியை மாற்றும் மருந்துகள் தற்கொலைக்கு எதிராக

ஆஸ்பத்திரியைச் சுற்றிப் பார்த்தபோதே ஓ... வென அழவேண்டும் போல் இருந்தது. ஆஸ்பத்திரியை நோக்கி அடிக்கப்பட்ட ஷெல்லால் சில சுவர்கள் சேதமடைந்திருந்தன.

''சொந்தக் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி'' என்ற பாரதியின் வாக்குப்போல் இரத்தம் கொடுக்காதவர்களும் எம் மத்தில் பலருண்டு இரத்தம் கொடுப்பதால் தீங்கு இல்லை. புதிய ரத்தம் உடம்பில் சேர்க்கப்படும் அதே சமயத்தில் அவசர தேவைக்காக இன்னொருவர் இடத்தில் இரத்தம் பெற்றுக் கொள்வதாக வைத்துக்கொள்வோம், அவர்களிடத்தில் இருக்கும் எய்ட்ஸ் [Aids] காப்ஸ் ஜெனற்றலிஸ் [Harpes Genitalis ஆகிய நோய்கள் இரத்தத்தைப் பாவிக்கும் நோயாளிக்கும் உடனே பற்றிக் கொள்ளும். இந்த மூன்று நோய்களையும் பின்பு நீக்குவதற்கு இங்குள்ள டாக்டர்களைக் கண்டும் எதுவிதமான

பலனும்ஏற்படப்போவதில்லை. இதனால் எமது இனத்தைக் காப்பாற்ற இரத்தம் சிந்தியோர் பாக்கியவான்களே!

ஒரு நோயாளியை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வர ஒரு குடும்பத்தில் 10 பேர் வந்திருந்ததை அவதானித்தேன். இந்த ''ஷெல்'' அடி நேரம் இவ்வாறு வருவது தேவைதானா? எனக்குள் நானே கேட்டுக் கொண்ட கேள்விகள் இவை!.

ஹிட்லரால் ஏவிவிடப்பட்ட பெம்பர் 22 நிமிடங்களில் இங்கிலாந்தில் குண்டு மழை பொழிந்தது. அமெரிக்காவும், ரஷயாவும் ஒன்றையொன்று அழிப்பதற்கு தேவையான நேரம் 6 நிமிடங்கள்! யாழ். கோட்டையிலிருந்து அடிக்கப்படும் ஷெல்லால் யாழ் நகரத்தில் மக்கள் துடிதுடித்து இறக்க 6 செக்கண்டே செல்கின்றது தமிழ் மக்களுக்காக 24 மணி நேரசேவை செய்யும் யாழ் பெரியாஸ்பத்திரியின் எதிர்காலம் கோட்டை முகாமல் கடும் சோதனைக்கு உள்ளாகியிருக்கின்றது.

[தொடரும்]

## வீட்டுக்காவல் தொடர்ந்து அமுலில்

சென்னை, நவம்பர், 11

பெங்களூரில் நடைபெறவுள்ள சார்க் அமைப்பின் உச்சிமகாநாடு முடிவடையும் வரையும் சென்னையில் தமிழ்ப் போராளிகள் தலைவர்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள வீட்டுக் காவல் உத்தரவு அமுலிலிருக்கும் எனத் தெரியவருகிறது.

(ஊ)

## ப நோ கூ சங்க கட்டடம்

### திறப்பு விழா

பருத்தித்துறை, செவ்

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க அலுவலகத்திற்கென சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அலுவலகக்கட்டிடம் இன்று 12ம் திகதி சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்படுமென சங்க இயக்குநர் பைத் தலைவர் திரு ரீ. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

## அனுமதிபெறத் தேவையில்லை

உடுவில், செவ்வாய்

அரசாங்க பாடசாலைகளில் தருமப்பாடசாலைகள் நடாத்துவதற்கு அல்லது அதற்கு சமமான அதுபோன்ற சுயமான சமய நடவடிக்கைகளுக்காக பாடசாலைக் கட்டிடங்களையோ விளையாட்டு மைதானங்களையோ பாவிப்பதற்கு கல்விப் பகுதியினரின் அனுமதிபெற வேண்டிய அவசியம் இல்லை என யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

[எ]

## கடைசி நேர வரி விளம்பரம்

### சேவை

எம்மிடம் ஆண், பெண் ஆகியோரது சாதகக் குறிப்புகள் உள்ளன நீங்கள் நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளலாம் முகவரி: க வெற்றிவேல், C/o திருமதி செல்லையா, காளிகோவிலடி, கும்பிழான், ஏழாலை

C 5735

### தேவை

அதிர்ஷ்டலாபச்சீட்டு கொமிஷன் அடிப்படையில் விற்பனை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: வீனஸ், 266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(C 5738)

### விற்பனைக்கு

வளர்ப்புக்குரிய 2 மறி ஆடுகளும், இறைச்சிக்குரிய கோழியும்: கிலோ ரூபா 40/- விற்பனைக்குண்டு ஆ. சிவராசா 6/2, கன்னுகிட்டி ஒழுங்கை யாழ்ப்பாணம். [C-5746]

வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியில் முருகமூர்த்தி விநாயகர் கோவிலடியில் 2½ பரப்புக் காணி வீட்டுடன் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. விபரம்: கோபால் பத்தர்-யோகேஸ்வரன், லதா நகை மாளிகை, 423 (247) சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம். [C 5734]

### மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்

### பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள லொறிக்காப்பாளர் (தற்காலிகம்) பதவிக்கு 24-11-86 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவத்திற்கும், மேலதிக விபரங்களுக்கும் சங்க காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

11-11-86

[A-3093]

### வெலிங்டன்

திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
ROMANCING THE STONE
(Action and Thrills)
[Coluor]

வெளிவந்துவிட்டது!

G. C. E. (O/L) பரீட்சை

புதிய சமூகக்கல்வியின் சாரம் 2

பரீட்சையில் விசேட சித்திபெற-துரித மீட்டல் செய்யச் சிறந்த கைநூல் புதிய சமூகக்கல்வி 10 நூலில் உள்ள 8 அத்தியாயங்களின் சுருக்கம். விலை ரூபா 14/-

கிடைக்குமிடம்

பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம். [C5745]


## இலங்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெலுங்குதேச கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலே திரு நட்வார்சிங் இவ்வாறு கூறினார்.

இந்தியா பிரச்னைக்கு இராணுவரீதியிலான தீர்வைவிரும்பவில்லை அரசியல் தீர்வையே விரும்புகிறது என்று கூறிய அவர் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக லோக்சபா உறுப்பினர்களுடன் தனது கவலையைப் பகிர்ந்துகொண்டார்.

தமிழர்களுக்கெதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகள் கொடூரமானவை என்றும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் போராளிகளிற்கும் இடம் இருக்கிறது என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

(ஒ)

## மர்மமான---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானமுறையில் தீக்கிரையாகியுள்ளன.

பின்பக்கத்தில் உள்ள மரக்கதவிற்கு உள்பக்கத்தில் பலமான தடைப்பூட்டுகள் போடப்பட்டுள்ளன. காலையில் கடை உரிமையாளரே வந்து பின்பக்க பூட்டுக்களை திறந்தார். பின்பக்க மரக்கதவின் அடிப்பாகத்தில் ஒரு துவாரம் காணப்படுவதாகவும், அத் துவாரம் முதலில் இருக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

சில பொருள்கள் நேற்றுக் காலையும் எரிந்தபடியிருந்தன. எரிந்த பொருட்கள் யாவும் வெளியில் போடப்பட்டுள்ளன.

(இ-எ)


### 3-1ம் நாள் நினைவஞ்சலி



கிறிஸ் தீனுப்பிள்ளை பிரான்சிஸ் வில்லியம்

பிறப்பு: 29 04 1907
இறப்பு: 13 10-1986

"என்னென்று சொல்ல-
நாம்
எதைச் சொல்ல இங்கு-
நாம்
எத்தனை வடிவம்
உனக்கு
ஆண்டவன் சந்நிதியில்
எம்மையும்
ஆவலுடன் நினைத்
தருளும்"

இவரின் பிரிவால்துயருறும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உறவினர். கரம்பொன். (C 5737)


## மாணவர் முன்னணி விளையாட்டுவிழா:

# இன்று சாம்பியன் மோதலும் பரிசளிப்பு வைபவமும்

யாழ்ப்பாணம், புதன்

மாணவர் முன்னணியின் சார்பில் பாடசாலைகளிடையே, நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி வலைப்பந்தாட்டப் போட்டிகளின் சாம்பியன் மோதல்களும் பரிசளிப்பு வைபவமும் இன்று சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலைமாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் முன்னர் நடாத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசும் இன்று வழங்கப்படும்.

இன்று நடைபெறும் உதைபந்தாட்டச் சாம்பியன் மோதலில், யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியும், கன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதும்.

மூன்றும்இடத்துக்கானமோதலில் இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதும்.

### வலைப்பந்தாட்ட முடிவுகள்

'அ' பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தா கல்லூரிக்கும் அத்தியார் இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் அத்தியார் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது. இரண்டாவது சுற்றுப் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலை வெற்றிபெற்றது.

கால் இறுதிப் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கும், அத்தியார் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலை வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. மற்றைய கால் இறுதிப் போட்டியில், சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும், திருக்குடும்ப கன்னியர் தமிழ்ப் பாடசாலைக்குமிடையே நடைபெற்ற போட்டியில் திருக்குடும்ப கன்னியர் தமிழ்ப்பாடசாலை வெற்றிபெற்று அரையிறுதிஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

மாணவ முன்னணியினால் கொக்குவில் இந்துக்கல்லூரியில் 10ம், 11ம் திகதிகளில் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 'ஆ' பிரிவு பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

ஆரம்பப் போட்டியில் பின்வரும் பாடசாலைகள் வெற்றியீட்டின மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் இராமநாதன் கல்லூரிக்கு மிடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், யாழ்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப் கல்லூரி வெற்றிபெற்றது. இளவாலை கொன்வென்ற் கல்லூரிக்கும் நடேஸ்வராக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி வெற்றி பெற்றது சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கும், மகாஜனக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி வெற்றிபெற்றது. கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்திற்கும், வட்டு இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

இரண்டாவது சுற்றுப்போட்டியில், திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப்பாடசாலைக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டில் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை வெற்றிபெற்றது. சாவகச்சேரி மகளிர்கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றது. நடேஸ்வராக்கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்குமிடையே நடைபெற்றபோட்டியில் மகாஜனக் கல்லூரி வெற்றிபெற்றது வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது.

கால் இறுதிப் போட்டியில் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலைக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது

மற்றைய கால் இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரிக்கும், உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரிவெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

### இன்றைய போட்டிகள்

இன்று சென். ஜோன்ஸ் மைதானத்தில் காலை 8-30 மணிக்கு 'அ', 'ஆ' பிரிவுகளின் அரையிறுதிப் போட்டிகள் நடைபெறும்.

முதலாவதாக திருக்குடும்ப கன்னியர்ஆங்கிலப் பாடசாலையும், உடுவில் மகளிர் கல்லூரியும் மோதும்.

இரண்டாவதாக திருக்குடும்ப கன்னியர் தமிழ்ப் பாடசாலையும், சுண்டிக்குளி மகளிர் பாடசாலையும் மோதும்

மாலை 2 மணிக்கு வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் நடைபெறும். (வி)

## ராணுவம்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் நேற்றுக்காலை ஊரிக்காடு கடைக்கு சென்ற சமயம் இச்சம்பவம் நடந்தது காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டார். இவர் முதலில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி, கோப்பாய் ஊடாக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துசெல்லப்பட்டார். இவருடன் காயமடைந்த மற்றும் சிலரும் அம்புலன்சில் வந்தனர்.


எமது நேற்றைய வெளியீடுகள்

(1) விடிஞ்சா கல்யாணம்
★ சத்தியராஜ் ★ சுஜாதா (பிரமிட் மாஸ்டர்)

(2) லக்ஷ்மி வந்தாச்சு
★ சிவாஜி ★ பத்மினி (பிரமிட் மாஸ்டர்)

குரு வீடியோ சென்ரர்

180, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22779 [C-5739]

இன்று மங்களகரமான திறப்புவிழா

ரெலிவோய்ஸ் வீடியோ கொம்பிளெக்ஸ்

12-11-86 காலை 10 மணி

K. K. S. வீதி, சுன்னுகம்

[சுன்னுகம் நூல் நிலைய அருகாமை]

ரெலிவோய்ஸ் ஸ்தாபனத்தார்

[C-5724]


### இன்று

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## 'லிப்ட்' இயங்காமையால் சிரமம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் ஆஸ்பத்திரி 5-ம் வார்ட்டிலிருந்து மேல்மாடியிலுள்ள 7-ம் வார்டுக்குச் செல்லும் 'லிப்ட்' பழுதடைந்துள்ளதால், ஆபத்தான நிலையிலுள்ள நோயாளர்களை ஊழியர்கள் சுமந்துகொண்டே செல்லவேண்டியிருக்கிறது.

இந்த 'லிப்ட்' சில காலமாகவே இயங்காமலிருப்பது குறிப்பிடத்தக்கது. [மா]

# "சமூக முன்னேற்றத்திற்கு கல்விக்கூடங்களின் சேவை இன்றியமையாதது"

பருத்தித்துறை, செவ்

"இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலும் கல்விச் சேவைகள் எதுவித மனச் சோர்வுமின்றி சிறப்பாகச் செயற்படுத்தப்பட வேண்டும். கல்விச்சேவைகள் சிறப்பாகச் செயற்படுத்தப்படும் போதுதான் எமது எதிர்காலச்சந்ததியினர் நாட்டிற்குகந்த நற்பிரஜைகளாகத் திகழமுடியும்."

இவ்வாறு ஊரெழு சி.சி. அரசினர் பாடசாலை நூற்றாண்டுவிழாவிலேபிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு எஸ். குலசிங்கம் விழாவிற்குத் தலைமை தாங்கினர், தொடர்ந்து உரையாற்றிய கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டதாவது: ஆசிரியப்பணி சமூகத்தில் மிக உயர்ந்த பணியாகும். இப்பணியினை ஆசிரியர்கள் தூய்மையுடன் மேற்கொள்ள வேண்டும் இப்பாடசாலை இப்பகுதி மக்களுக்குச் சிறந்த கல்விச்சேவையை வழங்கி இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் கல்வியதிகாரி திரு ஆ. வ. தங்கராஜா உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

ஒரு சமூகத்தின் முன்னேற்ற மேம்பாட்டிற்குக் கல்விக்கூடங்களின் சிறந்த சேவைகள் மிக இன்றியமையாததாகும், இப்பாடசாலை இப்பகுதி மக்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டிற்கு சிறந்த சேவையாற்றியுள்ளதென்பதை இன்றைய நூற்றாண்டு விழா எடுத்துக் காட்டுகின்றது. கல்வித்துறை அபிவிருத்திக்கு அதிபர் திரு சிவப்பிரகாசம் போன்றோரின் கல்விப்பணிகள் மிக இன்றியமையாததாகும்.

யாழ். உடற்கல்வி கல்வியதிகாரி திரு. கே. கணேசலிங்கமும் உரையாற்றினர். (சி)

## தொழில் ஸ்தாபன தகராற்றின் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

தொழில் ஸ்தாபனம் ஒன்று சம்பந்தமாகவும், காணி ஒன்று விற்கப்பட்டது தொடர்பாகவும் சகோதரர் இருவருக்கிடையே எழுந்த பிரச்னையை விசாரணை செய்த மானிப்பாய் வடக்குப் பிரதேச விழிப்பு மன்றம் இருதரப்பும் ஏற்றுக் கொள்ளும் படியான தீர்ப்பை வழங்கியுள்ளது.

'டைனல் ரேணிங்' தொழில் ஸ்தாபனம் தொடர்பாகவும் 'ரவர் ரோட்' காணி விற்றது சம்பந்தமாகவும் பிரதேச விழிப்பு மன்றத்தில் இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கை விசாரணை செய்த விழிப்புமன்றம் சுந்தரமூர்த்தி, தனது சகோதரர் இராஜேந்திரத்துக்கு 52 ஆயிரம் ரூபாவை மட்டும் வழங்க வேண்டும் என்று தீர்ப்புவழங்கியது. ஆயினும் விழிப்பு மன்றத்தினதும் விடுதலை ஸ்தாபனங்களினதும்வேண்டுகோளுக்கமையவுட 40ஆயிரம் ரூபாவை மட்டும் மன்றத்தின் மூலம் கொடுக்க சுந்தரமூர்த்தி சம்மதித்தார். இதற்கு இராசேந்திரமும் சம்மதித்தார்.

இத்துடன் முன்னர் வழங்கிய காசோலையைமீளப் பெற்றுத் தரும்படி சுந்தரமூர்த்தி சபையிடம் கேட்டதற்கு இராசேந்திரம் சம்மதித்தார்.

## ஆசிரியர் சங்க பொதுக் கூட்டம்

பண்டத்தரிப்பு, செவ்

யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் ஏழாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15ம் திகதி சனிக்கிழமை முற்பகல் யாழ் மறைக் கல்வி நிலையத்தில் சங்கத் தலைவர் திரு. ஏ. எஸ் அகஸ்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு பிரதம அதிதியாக யாழ். ஆயர் பேரருள் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ். ஏ. மைக்கல்சாமி அடிகளார், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. தா மகாசிவம், யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க பரிபாலகர் அருட்திரு ஜி நேசநாயகம் அடிகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்

இக்கூட்டத்தில் பண்டிதர் வித்துவான் க த. ஞானப்பிரகாசம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். (சி)

## கைப்பணிப் பயிற்சி

சாவகச்சேரி. செவ்.

பனை அபிவிருத்திச்சபையின் ஆதரவுடன் அறவழிப்போராட்டக்குழு ன கைப்பணிப் பயிற்சி வகுப்பு ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இப்பயிற்சி வகுப்பினை பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி உத்தியோகத்தர் திரு வீ, ஜீ தங்கவேல் பயிற்சியாளர்களுக்கு பனை ஓலை வழங்கிஆரம்பித்துவைத்தார்.

## கட்டடத் திறப்புவிழா

நெடுந்தீவு. செவ்.

வலி-கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதியதொரு செயலகக் கட்டடத்தை புதன்கிழமை சாலை திறக்கவுள்ளது.

இப்புதிய செயலகக் கட்டடத்தை கூட்டுறவு இலாகாவின் எண்பாவைப்பகுதியன் அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு க சண்முகலிங்கம் திறந்துவைப்பார். (ரா)

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



ஜே. ரி. றிச்சாட்
(P. H. I.)

தோற்றம்: 09-05-1914

மறைவு: 12-11-1982

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

183, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். C 5701

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராசையா
இராசலிங்கம்

தோற்றம்: 12-12-1924

மறைவு: 08-11-1981

திதி: 12-11-1986

கொக்குவில் புதுக்கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்தவருமான இளைப்பாறிய வருமானவரி உத்தியோகஸ்தர் இராசையா இராசலிங்கத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளை,
C 5721 சகோதரி.

## இன்றைய பலன்

திகதி: 26 [1986-11-12]
மாதம்: ஐப்பசி
திதி: ஏகாதசி பி.ப. வரை
கிழமை: புதன்
நட்சத்திரம்: பூரட்டாதி காலை 7.21ன் மேல் உத்தரட்டாதி

மேடம்: வீட்டில் மதிப்புயரும் வாக்குப்பலத்தால் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். தொழில்துறையிலும் அதிகாரப் போதையில் நடந்து செல்லுவீர்கள்.

இடபம்: ஆசாரக்குறைவும் உண்டு, பூமிப்பிணக்கும் தலைதூக்கும். உடல் நலனில் கவனம் செலுத்தவும் சுமாரான தினம்.

மிதுனம்: வாகனவிருத்தியுமுண்டு. வளமான வாழ்வுமுண்டு. முதியோர் ஆசியுடன் தொழில் வளமும் பெருகும்.

கடகம்: மேலான வாழ்வு கிட்டும். முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். பிள்ளைகளினால் பெருமை வந்து சேரும்.

சிங்கம்: அவசரகோபம் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். வீணான சிந்தனையால் சோர்வு தென்படும். பகைகளும் அதிகரிக்கும்

கன்னி: வாழ்க்கை இன்று தேனாக மாறும். களஸ்திரவழியாலும் நன்மை கிட்டும். தொழில் மகிழ்ச்சியுண்டு.

துலாம்: பலவழிகளாலும் தொல்லைகள் தோன்றும் புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும். வீண் செலவுகளும் ஏற்படலாம்.

விருச்சிகம் அறவழிகளை மனம் நாடும். சுற்றுடலில் மதிப்புயரும். சிலருக்கு நீண்டநாள் பிணியும் அகலும்.

தனுசு: நினைத்தது நடைமுறைப்படுத்தப்படலாம். மனைச்சிறப்புமுண்டு. தொழில் நிலைமாற்றமுண்டாம்.

மகரம்; பிறர் மூலம் உதவி கிட்டும். சகோதர வழியாலும் நற்செய்தி கிட்டும். பொருளாதார விருத்தியுமுண்டு.

கும்பம்: பலவழிகளாலும் தொல்லைகள் தோன்றும் மனப்போராட்டம் அதிகரிக்கும். தொழிலிலும் பிளவுகள் தோன்றும்.

மீனம்: குறைகேட்க நேரிடும். வழக்கு விவகாரமும் தோன்றலாம் தொழில் விடயத்திலும் அதிக கவனம் செலுத்தவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஆறு மாணவர் சித்தி

பருத்தித்துறை, செவ்.

அண்மையில் நடைபெற்ற 6ம் ஆண்டுபுலமைப்பரிசில்பரீட்சையில் நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலையில் இருந்து தோற்றிய ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளில் இப் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களே கூடுதலாகச் சித்தியடைந்துள்ளனர்.

தி. கரிகரன், செ. செந்தில்குமாரன். கு. சூரியகுமார், இ. சிவகுமார், தி பஞ்சுளா சு. ராஜினி ஆகியோரே சித்தியடைந்துள்ள மாணவர்களாவர். [ஊ]

## மணிவாசகர் சபை சைவசமய பரீட்சை

யாழ்ப்பாணம், புதன்

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் வருடாந்த மணிவாசகர் சைவ சமய பாடப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காரைநகரில் 14 பாடசாலைகளைச்சேர்ந்தசுமார் 2000மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பதாகவும் இதற்கான பரிசளிப்பு விழா அடுத்த மாதம் ஈழத்துச்சிதம்பரத்தில் நடைபெறும் திருவெம்பாவை தினத்தில் இறுதி நாள் மணிவாசகர் விழவில் வழங்கப்படுமெனச் சபைத் தலைவர் திரு. செ.தேவதாசன் தெரிவித்துள்ளார். (சி)


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி

★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம்மாதம் 15-ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்புகொள்ளவும்;

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதி Labourers ஆக செல்ல விரும்புவோர் 14-ம் திகதிக்கு முன்னதாக பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:

**N. பாலா,**

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் வங்களாவடிச் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் குப்பிளான் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

[A-2845]


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல ஈடு:-6220
தம்பையா நடராசா, சுன்னாகம்,

வழக்காளி.

சந்தையா குலேந்திரன் பெண் இராசலட்சுமி
இதமவரத்தை, தெல்லிப்பழை கிழக்கு.

எதிராளிகள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்ற கட்டளைப்படி பின்னால்விபரிக்கப்படும் காணியை 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ம் திகதி (17-11-86) திங்கட்கிழமை முற்பகல 10.00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 18708/-வும். மேலும் 10 000/-க்கு வருடமொன்றுக்கு 55% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1985ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1986ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதிவரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வீதவட்டியான வழக்குச் செலவு ரூபா5 51-20 (இதில் நடைபெற்றசெலவு ரூபா 2881.20 நடைபெறவேண்டியசெலவு ரூபா 1151-50 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 1178-50] கொடுக்கவேண்டி இருப்பதாலும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவில்பற்று தெல்லிப்பழை கிழக்கிறை இறமலாவத்தை நிலப்பரப்பு [16] பதினாறும் குளி(11½) பதினொன்றரையும் செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கெல்லையிற் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கிறிஸ்தோபிள்ளை சின்னத்துரைகுரிய மறுபேருக்குரிய ஆதனங்கள் மேற்கு சந்தையா இராசதுரைக்குரிய ஆதனம் தெற்கு ஒழுங்கை இதிற் சொரியலாய் நிலப்பரப்பு ஒன்றரையும் (நிலை-பர-1½) கல்வீட்டில் அரைவாசியும் அதற்குரியவைகளும்.

க. நவரத்தினம்,
நீதிமன்ற விற்பனையாளரும்
விலைமதிப்பாளரும்,

தாவளை, வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை.
27-8-86.

(C 5728)

## நலன்புரிச்

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற ஷெல்களினால் யாழ். ஆஸ்பத்திரி பாதிக்கப்படுவதன் காரணமாக அங்கு சிகிச்சை பெற நோயாளர்கள் அச்சம் கொண்டுள்ளதால், சாவகச்சேரியில் இருக்கின்ற மாவட்ட வைத்தியசாலையின் தரத்தினை உயர்த்தி, அங்கு சகலவிதமான சிகிச்சைகளும் பெற உடன் ஆவன செய்யும்படி, சாவகச்சேரி நோயாளர் நலன்புரிச்சங்கம் யாழ் சுகாதார சேவைப்பணிப்பாளரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு. இ. சின்னத்தம்பி, மகஜரில் மேலும் தற்போதைய கால கட்டத்தில் சாவகச்சேரிப் பிரதேசம் பாதுகாப்புக் கொண்டுள்ளதாக இருப்பதால் யாழ். ஆஸ்பத்திரியின் தரத்துக்கு சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையை உயர்த்துவதுடன் இவ் வைத்தியசாலைக்கு வேண்டிய சகல விதமான உபகரணங்களையும் அனுப்பி வைக்க ஆவன செய்யும்படி கேட்டுள்ளார்


## யாழ். மத்திய கல்லூரி

ஏழாம் ஆண்டு வகுப்புக்கு விண்ணப்பங்கள் தகுதியான மாணவர்களிடமிருந்து 28-11-86 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிபர்.

[A-3089]

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக, வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

A/L

87 மீட்டல் வகுப்பு

DAY CLASSES

8 மணி

Sat-Sun: வகுப்பு 12 மணி

ஆரம்பமாகியுள்ளன

குறிப்பு:- கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது. A 2860

O/L, ENGLISH
Paper Class
by
S. B. IYAR

5-வது பிரிவு ஆரம்பம்

14-11-86

நேரம் மாலை 6 மணி - 7 மணி

12, Wyman Road, Nallur.

C 5730

## நியூ விக்ரேஸ்

புதிய வீடியோ பட வெளியீடுகள்

1. விடிஞ்சாக் கல்யாணம் — மாஸ்ரர்
சத்தியராஜ், சுஜாதா
2. தர்மதேவதை — மாஸ்ரர்
விஜயகாந், ராதிகா
3. பாலைவன ரோஜாக்கள் — மாஸ்ரர்
சத்தியராஜ், லஷ்மி
4. லஷ்மி வந்தாச்சு — மாஸ்ரர்
சிவாஜி, பத்மினி
5. புன்னகை மன்னன் — மாஸ்ரர்
கமல், ரேவதி

நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

தொலைபேசி: 23532

[A 2861]




## மாணவர் முன்னணி உதைபந்தாட்டப்
# சென்.ஜோன்ஸ்-ஸ்கந்தா இறுதி ஆட்டத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

மாணவமுன்னணியின் சார்பில் பாடசாலை கோஷ்டிகளிடையே நடைபெற்றுவரும், உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை சென் ஜோன்ஸ் கல்லூரியினரின் கையே ஓங்கியிருந்தது இக் கோஷ்டியின காப்டனின் சிறந்த ஆட்டத்தினாலேயே மேற்படி கோஷ்டியினர் இடைவேளைக்குப் பின்னர் ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றனர்.

இப் போட்டிக்கு திரு. ஏ. எஸ். குணரட்னம் மத்தியஸ்தம் வகித்தார்

ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு 'அரை இறுதி' ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மிக இலகுவாக 5-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்குத் திரு.எம். தேவதாஸ் மத்தியஸ்தம்வகித்தார். இப்போட்டிகள் அனைத்தும் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (சி)

## பெயர் சூட்டும் வைபவம் பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

இன்று நடைபெறவிருந்த பேராசிரியர் செல்வநாயகம் நினைவு மண்டப பெயர்சூட்டும் வைபவம் பின்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது [சி]

## உலகப் பிரச்னைகளுக்கு இஸ்லாம் வழங்கும் தீர்வுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரிய முஹய்தீன் பள்ளியில் இன்று மாலை 7-45 மணிக்கு உலகப் பிரச்னைகளுக்கு இஸ்லாம் வழங்கும் தீர்வுகள்' என்னும் பொருளில் அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் தலைவர் அல்ஹாஜ் மௌலவி கே.எம் எச்.கலிதீன் விஷேட சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## 4 லட்சம் ரூபா மின்சார நிலுவை

பண்டத்தரிப்பு, செவ்

யாழ் அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பிரதேசத்தில் சுமார் 4 லட்சம் ரூபா மின்சார நிலுவையை மின்பாவனையாளர்கள் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இந்தப் பணத்தை அவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2 மாத மின்சார நிலுவைப் பணத்தைச் செலுத்தாதிருக்கும் மின் பாவனையாளர்களின் மின்சார இணைப்புகள் யாவும் விரைவில் துண்டிக்கப்படவிருப்பதாகவும் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ் ரி சதிரவேலுப்பிள்ளை தெரிவித்துள்ளார். [சி]

## வருடாந்த———
# சாரணர் பாசறை விழாவில் மகாஜனா முதலிடம்

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறை வட்டார சாரணர் சங்க வருடாந்த பாசறை விழா போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிகளில் 18 பாடசாலைகளின் சாரணர்குழுக்கள் பங்குபற்றின.

போட்டிகளில் இரண்டாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், மூன்றும் இடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், நான்காம் இடத்தை மல்லாகம் மகாவித்தியாலயமும், ஐந்தாம் இடத்தை வட்டு இந்துக் கல்லூரி, காங்கேசன் நடேஸ்வராக் கல்லூரி ஆகியனவும் பெற்றன.

காங்கேசன்துறை வட்டார குருளைச் சாரணர் பாசறை விழா போட்டிகள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றசமயம் இளவாலை றோ க. ஆண்கள் பாடசாலை முதலாமிடத்தைப் பெற்றது.

2-ம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும், 3-ம் இடத்தை மாதகல் சென். தோமஸ் றோ. க பெண்கள் பாடசாலையும், 4-ம் இடத்தை இணுவில் அ. மி. த. க. பாடசாலை, தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியும் பெற்றன.

இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை மாவட்ட சாரண ஆணையாளர் திரு.நா போஜன் மேற்கொண்டிருந்தார். [சி]

## வீடுகள் கையளிப்பு

வவனியா செவ்

செவன நிதியின் கீழ் வவனியா மாவட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் மிக விரைவில் உரிமையாளர்களுக்கு கையளிக்கப்படவுள்ளன.

ஆசிகுளம், புதுக்குளம், மருதமடு சூடுவெந்தபுலவு கிராமோதய சபைப்பிரிவுகளில் இவ் வீடுகள் அமைந்துள்ளன

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அனுசரணையுடன் இவ்வீடுகள் கட்டப்பட்டதாகும். குறித்த கிராமோதய சபைப்பிரிவில் வறியவர்களுக்கே இவ் வீடுகள் கிடைக்கவுள்ளன. [எ]

## சனசமூக நிலைய ஒன்றிய கருத்தரங்கு

பண்டத்தரிப்பு, செவ்.

யாழ்.அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பிரதேசத்திலுள்ள சனசமூகநிலையங்களின் ஒன்றியத்தின் கருத்தரங்கு நாளை மறுதினம் 14ம் திகதி முற்பகல் பண்டத்தரிப்புப் பட்டின பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவ சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ம சரவணபவஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ் கலைமைப் பீட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன் உட்படப் பலர் கலந்துரையாற்றுவார்கள். [சி]

## மக்கள் கவனம் திரும்பியது

வல்வெட்டித்துறை, செவ்

வல்வைப் பகுதியில் பழமை வாய்ந்த பெரும் ஆலயங்களில் ஒன்றான வல்வை வயலூர் முருகையன் கோவில் பலகாலமாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது.

தற்சமயம் பெருமையும் பிரசித்தியும்பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் கைவிடப்பட்டுள்ளதால், கைவிடப்பட்டிருந்த முருகையனின் மீது முருக பக்தர்கள் கவனம் திரும்பியுள்ளதால், அவருக்கும் பிரசித்தம் பிறந்துள்ளது.

அப்பகுதி மக்கள் இவ்ஆலயத்தை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தும் உத்தேசத்துடன் அவ் ஆலயமூர்த்திகள் மூலஸ்த்தானங்களிலிருந்து அகற்றப்பட்டு வாலஸ்தாபனம் செய்யப்பட்டு பூஜைகிரமங்கள் நடைபெற்றுவருகின்றன. [எ]

## இலவச கண் சிகிச்சையும் கண்ணாடி வழங்கலும்

மாவிட்டபுரம், செவ்.

மாவை லயன்ஸ் கழகம் மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய முதலுதவிச் சிகிச்சை நிலையத்தின் ஆதரவுடன் நடத்தும் இலவச கண் சிகிச்சையும், கண்ணாடி வழங்கலும் எதிர்வரும் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பூர் ஒன்றிய முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில் நடைபெறும்.

இக்சிகிச்சையில் பங்குபற்றி பயனடைய விரும்புவோர் முதலுதவிச் சிகிச்சை நிலைய செயலாளர் திரு செ. தனபாலசிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [சி]

## சிறந்த நிர்வாகஸ்தர்

'கப்பினு' என நிர்வாக சேவை நண்பர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. எஸ். கதிர்காமநாதன் அண்மையில் காலமானது இலங்கை நிர்வாக சேவைக்கும் சைவ உலகிற்கும் பேரிழப்பாகும் சிறந்த நிர்வாகஸ்தரான அவர், அரசாங்க அதிபராக கடமைபுரிந்த இடங்களிலெல்லாம் தனது அனுபவ முத்திரையை விட்டுச் சென்றுள்ளார். அம்பாந்தோட்டையில் அரசாங்க அதிபராக இருந்த பொழுது கதிர்காம வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இறுதிவரை கதிர்காம உற்சவத்தை அவர் தவறவிட்டதேயில்லை. மன்னாரில் திருக்கேதீஸ்வரத்திற்கும் மட்டக்களப்பில் வெருகல் பிள்ளையாருக்கும் அவர் செய்த சேவைகள் பல.

சிறந்த கணக்கியல் நிபுணரான அவர் எவ்விடயத்தையும் ஆராய்ந்து அறிந்த பின்பே செயலாற்றும் திறமை கொண்டிருந்தார். அவர் அறிவுரை நாடிச் சென்ற நண்பர்கள், பொதுமக்கள் பயனடைந்தே செல்வர்.

பெரியோர், சிறியோர் என்ற பாகுபாடு அவருக்குக் கிடையாது. நிர்வாக சேவையில் முதலிடத்தை வகித்துக் கொண்டிருந்த அவர், வயதும் அனுபவமும் குறைந்த ஊழியருடன் வேலைசெய்வதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையைத் திறம்படச் செய்வதே அவரது நோக்கு. இறுதிவரை பல முக்கிய குழுக்களில் அங்கம் வகித்து தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மறு சீரமைக்கும் குழுவில் இவர் முக்கிய பணிபுரிந்தார்.

இவரது இழப்பு பேரிழப்பு. இக்கட்டான இவ்வேளையில் அனுபவமும், புத்திசாதுரியமுடைய சிறந்த நிர்வாகஸ்தரை நாம் இழந்து விட்டோம்.

-கோணன்-

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 12-11-86

# "விஜிதரன் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும்"

## கி. தொ. ச. அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

"யாழ். பல்கலைக்கழக மாணவன் அ. விஜிதரன் போராளிகளின் பூரண கட்டுப்பாட்டிலிருக்கும் யாழ்ப்பாணத்தில வைத்துக் கடத்தப்பட்ட சம்பவமானது யாழ். பல்கலைக்கழக வரலாற்றிலே கறைபடிந்த ஒரு அத்தியாயமாகும்" என்று கிராமிய தொழிலாளர்சங்கம் நேற்று விடுத்த இறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழகம் தேச விடுதலைப் போராட்டத்தில் கணிசமான பங்கை அளித்து வருவது தமிழ்மக்கள் அறியாதொன்றல்ல. பல்வேறு அடக்கு முறைகளுக்கு எதிராக மாணவர்கள் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தியதை அனைவரும் அறிவர். தற்போதைய சூழ்நிலையில் தமிழ் பிரதேசங்களினது மாணவர்கள் கல்விபயிலும் வசதிகளைக் கொண்டது இக் கல்விக்கூடமே. இந்நிலையில் மாணவன் கடத்தப்பட்டது பெரும் துரதிஷ்டவசமாகும். அத்துடன் வேறு பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இக் கடத்தல் சம்பவம் ஒரு பயங்கர சவாலாகும்.

விஜிதரன் விடுதலை செய்யப்படாவிடில் விபரீதம் ஏற்படுமென கல்விமான்கள் எச்சரித்துள்ளனர். இதன் அபாயம் உணரப்படல் வேண்டும். இதனை உணர்ந்து கடத்தப்பட்ட விஜிதரன் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். விஜிதரனின் விடுதலைக்காக எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும், போராட்ட நடவடிக்கைகளுக்கும் கிராமிய தொழிலாளர் சங்கம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும். (ஒ)

## நவம்பர் மாத கச்சேரி ஓய்வூதியம்

யாழ்ப்பாணம். புதன்

இலங்கை வங்கி கச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெற்றுவருதவர்க்குரிய நவம்பர் மாதத்திற்கான ஓய்வூதியம் எதிர்வரும் 15, 17, 18 சனி, திங்கள், செவ்வாய் கிழமைகளில் கோட்டைக் கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

15ம் திகதி சனி சிவில் ஆசிரியர் ஓய்வூதியம் பெறுவோர் சகலருக்கும் 17ம் திகதி திங்கள் விதவைகள் ஓய்வூதியமும் 18ம் திகதி செவ்வாய் ஆசிரியர் விதவைகள், படைக்கல சேவிதர்கள் அவர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்குமான ஓய்வூதியமும் வழங்கப்படும்.

## காயமடைந்தோர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயது 24 புலோலி கிழக்கு, எஸ் தங்கராஜா வயது 26 பருத்தித்துறை, எஸ். தங்கச்சி வயது 24 தும்பளை, எஸ். ராமு வயது 20 புலோலி, எஸ். நாகேஸ்வரி வயது 36 பருத்தித்துறை. எஸ். தங்கராணி வயது 34 வல்வெட்டித்துறை, மேரி ராஜினி வயது 34 பருத்தித்துறை எஸ். ஜெயராணி வயது 38 பன்னைக்கட்டை, த. கிருபாகரன் 10 மாதம் பருத்தித்துறை, என் கிரேந்திரன் வயது 40 எஸ். வெற்றிவேற்பிள்ளை வயது42 மந்திகை இ தங்கராசா வயது 33 வே. கருணாகரன் வயது 25 பருத்தித்துறை, எஸ், கிருஷ்ணலிங்கம் வயது 34 கோண்டாவில்.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்:

எஸ் சந்திரன் 22 வயது அச்சுவேலி மதன் 20 வயது சாவகச்சேரி, மணிவண்ணன் 19 வயது பருத்தித்துறை, ராஜன் 28 வயது பருத்தித்துறை, தீபா பருத்தித்துறை, தி. சத்தியமூர்த்தி 18 வயது பத்தமேனி, எஸ். ஜெயராசா 18 வயது பத்தமேனி கே சுந்தரலிங்கம் 30 வயது நவற்கிரி கணேஷ் 23 வயது புத்தூர். ராமு 23 வல்லை, அன்பு 19 வயது யாழ்ப்பாணம், சண்முகராசா 19 வயது யாழ்ப்பாணம் நே. புவனேஸ்வரி 30 வயது அச்சுவேலி, பஸ்லின் 20 வயது பருத்திதுறை, எஸ் செல்வம் 20 வயது பருத்தித்துறை, தேவராசா 55 வயது அச்சுவேலி, செல்வம் 18வயதுசாவகச்சேரி, பாக்கி 31 வயது சாவகச்சேரி, மகேந்திரன் 21 வயது புத்தூர், கமலதாசன் 16 வயது அல்வாய். [ஊ]

## ஆறுபேர் பலி, 40 பேர்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செயலாள அலுவலகம், நூலகம், சைக்கிள் தரிப்பிடம் ஆகியவை படையினரின் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்தன. இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளிகள் ஊழியர் பதற்றமடைந்தனர். ஆயினும் மருத்துவர், தாதிமார்கள் துணிவுடன் செயற்பட்டு பருத்தித்துறையில் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டிருந்தனர்

### போராளிகள் எதிர்த்தாக்குதல்

இதேவேளை, பருத்தித்துறை முகாமிலிருந்து வெளியேறிய ராணுவத்தினரை எதிர்த்துப் போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இதையடுத்து ராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களையடுத்து பருத்தித்துறை, புலோலி, நெல்லியடிப்பகுதிகளில் பதற்றம் நிலவியது. பாடசாலைகள், சந்தைகள் நடைபெறவில்லை. போக்குவரத்தும் ஸ்தம்பித்திருந்ததுடன் மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றனர். போராளிகள் பல இடங்களிலும் ஆயுதபாணிகளாகக் காணப்பட்டனர். [பரு-நி]

### அச்சுவேலியில்

தொண்டமானாறு முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சயிந்திரன் [21 வயது] என்பவர் பலியானார். ஆறுபேர் காயமடைந்தனர்.

பலியான சயிந்திரனின் சடலம் நேற்று பிற்பகல் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. தலையிலும், காலிலும் காயமேற்பட்டிருந்தது.

சத்தியமூர்த்தி [17 வயது], ஜெயம் [18 வயது], செ. சந்திரன் உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

### யாழ் நகரில்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். கோட்டையிலுள்ள மூன்று வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை முதல் பிற்பகல்வரை சுமார் 10 சடவைகள் ஷெல்தாக்குதல்கள் நடைபெற்றன.

ஷெல் தாக்குதல் ஆரம்பமானதும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டன. பஸ்கள் மினிபஸ்கள் மற்றும் வாகனங்கள் ஆரியகுளம் விஸ்சர் சந்திகளுக்குச் சென்றன.

மக்கள் ஆஸ்பத்திரியில் தஞ்சமடைந்துனர். வடமராட்சி அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் போக்குவரத்து வசதியில்லாமையால் ஆஸ்பத்திரியில் இரவு தங்கினார்கள்.

### நாவற்குழியில்

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நேற்று 'ஷெல்' தாக்குதல் நடத்தப்பட்டது இத் தாக்குதலினால் நாவற்குழி, அரியாலை கைதடி, இருபாலை பகுதிகளில் பதற்றம் நிலவியது.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா ஆறுமுகம்

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கனகம்மா ஆறுமுகம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. வீ. ஆறுமுகம் [அஞ்சலகம் புங்குடுதீவு] அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பத்மாவதி முதலித்தம்பி, காலஞ்சென்ற திருமதி தையல்நாயகி சின்னத்துரை, காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (முன்னாள் முகாமையாளர் வவனியாதெற்குப. நோ. கூ. சங்கம்), காராளபிள்ளை [அஞ்சல் அலுவலகம் புங்குடுதீவு], அரியரெத்தினம் [புகையிரத தலைமைப் பாதுகாவலர் அநுராதபுரம்] ஆகியோரின் அன்புத்தாயாரும், முதலித்தம்பி (வர்த்தகர் முல்லைத்தீவு), சின்னத்துரை (வர்த்தகர் ஓமந்தை), கமலாதேவி (ஆசிரியை), மங்கயற்கரசி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலாயன் பென்சனியர்), காலஞ்சென்ற ஆறுமுகம் (மலாயன் பென்சனியர்), காலஞ்சென்ற திருமதி காதலிப்பிள்ளை அம்பலவாணர் ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 1986-11-12 (இன்று) புதன்கிழமை பகல் 11 மணியளவில் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. காராளபிள்ளை

C 5741

## புல்மோட்டையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து நிறுத்தி சுமார் ஒரு மணித்தியாலயம் வரை உக்கிரமான நேரடி மோதலில ஈடுபட்டனர்.

இம்மோதலின்போது 12 இராணுவத்தினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயத்துக்குள்ளானார். ஏனைய இருவரும் தப்பி ஓடிவிட்டனர் இம்மோதலின் போது பல நவீன ரக தன்னியக்க ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன அதேசமயம் எமது தோழர்களுக்கு எதுவிதஇழப்புமில்லை.

திருமலையில் முப்படைகளும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்கு அப்பிரதேசத்தின் இயற்கைத் துறைமுகத்தையும் ஏனைய வளங்களையும் தாரைவார்ப்பதையே நோக்கமாகக் கொண்டு இஸ்ரேலிய சியோனிச ஆட்சியின் இராணுவ ஆலோசகர்களின் துணையோடு திட்டமிட்டமுறையில் நடாத்தும் அழித்தொழிப்புகளின் மத்தியிலும் எமது தோழர்கள் அப்பிரதேசத்தில் நிலைத்து நின்று மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு நடாத்தும் இத்தகைய தாக்குதல்கள் மீண்டும் மக்களுக்கு புதிய நம்பிக்கையைக் கொடுக்கின்றது. [ஒ]

## வடமராட்சியில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படையினரினதும் உதவியுடன் வடமராட்சியில் உள்ள தொண்டமனாறு, வல்வெட்டித்துறை பருத்தித்துறை இராணுவ முகாம்கள் பெரும் இனஒழிப்பை புரிய தற்சமயம்வரை முனைந்துகொண்டிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 5-30 மணியிலிருந்து பொம்பர் விமானங்களும், 3 ஹெலிகொப்டர்களும் சீபிளேனும் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கின.

அதேசமயம் தொண்டமனாறு முகாமில் இருந்து வெளிவந்த இராணுவத்தினர் மீது எமது வீரர்கள் கனன் சார்ஜ் தாக்குதல் மேற்கொண்டதில 5 ராணுவத்தினர் வரை கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

பருத்தித்துறை முகாமில் இருந்தும் ராணுவத்தினர் முனைகைலாஸ் வரை வெளிவந்தனர் இவர்கள்மீதும் எமது வீரர்கள் நேரடித் தாக்குதல் மேற்கொண்டதிலும் பலராணுவத்தினர் காயமடைந்தனர். அதே சமயம் வல்வைமுகாமிலிருந்தும் வெளிவந்த ராணுவத்தினருடனும் எமது வீரர்கள் நேரடி மோதல் நடாத்தியவாறு உள்ளனர்

கடற்படையினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களையும், விமானப்படையினரின் ஹெலிகொப்டர்களினதும், பொம்பர்களினதும் குண்டு வீச்சையும் தொடர்ந்து போராடி எமது வீரர்கள முறியடித்துக்கொண்டிருக்கின்றனர்.

சிலிண்டர் தாக்குதல் தொடர்ச்சியான நேரடியுத்தம் இராணுவத்தினர் தரப்பில் பெரும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

வடமராட்சியை முற்றாக நிர்மூலமாக்கும் முப்படையினரின் முயற்சியை முறியடிக்க எமது வீரர்கள் இறுதி மூச்சுவரை போராடிக்கொண்டிருக்கின்றனர். எம்மக்களை காக்கும் இப்போரில் தற்சமயம் வரை எமது 3 வீரர்கள் களப்பலியாகியுள்ளனர். 5 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

வீரமரணமடைந்த பட்டேல், தேவமுரளி [ரகுபதி பொலிகண்டி] பவான் 2-ம் லெப்டினன்ட் [பஞ்சாட்சரநாதன் தொண்டமனாறு] சிவன் [சிவகுமார் தொண்டமனாறு] ஆகியோருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றோம். இவர்களில் பட்டேல், பவான் ஆகியோர் பருத்தித்துறை முகாம் ராணுவத்தினருடனான நேரடிமோதலிலும், சிவன் வல்வை ராணுவத்தினருடனான நேரடிமோதலிலும்வீரமரணமடைந்தனர்.

### வல்லைவெளியில்

இத்துடன் வல்லைவெளியில் முகாமிடும் நோக்கில் இராணுவத்தினர் ஹெலிகொப்டரில் வந்திறங்கியசமயம் எமது வீரர்களின் தாக்குதலால் இராணுவத்தினரின்முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய இராணுவமுகாம்களிலும் இருந்து (நாவற்குளி, கோட்டை, பலாலி) இராணுவம் வெளியேற எடுத்த முயற்சிகள் அனைத்தும் எம்மால் முறிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இராணுவத்தினரின் இன ஒழிப்பை எம் இறுதி மூச்சுள்ளவரை போராடி முறியடிப்போம் தமிழீழமக்களும் எம்முடன் இணைந்து தற்காப்பு யுத்தத்தில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறுவிடுதலைப்புலிகள் அறிக்கைகூறுகிறது.

## முதல் ஷெல்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்து வெடித்ததால் எனக்கு கை, காலில் காயங்கள் ஏற்பட்டது.

பிற்பகல் 2 மணிபிருந்த செல்வச் சந்நிதி அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [இ]

## வல்லையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைச் சந்தியிலுள்ள செல்லத்துரை என்பவரின் வீடு உட்பட பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுககாலை 5 30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து இரு ஹெலிகொப்டர்கள் மூலம் சுமார் 15 இராணுவத்தினர் வல்லைப் பாலத்துக்கு அண்மையில் உள்ள பனங்கூடல் வெளியில் தரை இறக்கப்பட்டனர்.

இராணுவத்தினருக்கு உதவியாக குண்டு வீச்சு விமானம் இப்பகுதியின்மேல் வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்தது சீபிளேனும் வட்டமிட்டவண்ணமிருந்தது.

தரைஇறங்கிய இராணுவத்தினர் வல்லைமுனியப்பர் கோவில் பக்கமாக நடந்து வந்து வல்லை பாலததின் ஓரத்தில் கிடந்த பெரிய 'கான்கிறீட் குழாய்களை வீதிக்குக் குறுக்கே இழுத்துப்போட்டார்கள். இக் குழாய்களுக்கு உள்ளே இந்த இராணுவத்தினர் முகம் குடுத்து புறபடுத்திருந்தனர்.

இதனை ஏற்கனவே அறிந்துகொண்டதால் வாகனப்போக்குவரத்துக்கள் எதுவும் இப்பாதையால் இடம்பெறவில்லை.

இத்தருணம் வீதியில் மறைந்து படுத்திருந்த இராணுவத்தினரை நோக்கி போராளிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

காலை எட்டு மணியளவில் இரு ஹெலிகாப்டர்கள் முன்னர் இறங்கிய இடத்தை வந்தடைந்ததும் அதில் இராணுவத்தினர் ஏறி முகாம் நோக்கித் திரும்பிச் சென்றனர். [மா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் லோஸ் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126